
தமிழ்ச்சிட்டு
குரல்: 1 இசை: 11
கரு 15 காசு
தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்
சி.எம்.இராசு.



# உங்கள் மடல்கள்

உலகின் உயர்தனிச் செம்மொழி தமிழ்மொழி என்பதை எண்ணி மாணவர்களாகிய நாங்கள் பெருமிதங் கொள்ளுகின்றோம். அவரவர் தாய்க்கு ஏற்படும் இன்னலைப் போக்குவது போலப் பிறமொழிக் கலப் பில்லாமல் தனித்தியங்கும் ஆற்றல் படைத்த நம் செந்தமிழுக்கு அழிவைத் தேடும் வகையில் கட்டாயக் கல்வியாக்கப்பட்ட இந்தியை ஒழிக்க எழுச்சி கொண்டோம். இங்ஙனம் எங்களுக்குத் தமிழார்வத்தை மிகுதிப் படுத்திவரும் தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆகிய ஏடுகளுக்கு நாங்கள் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம்.

— க. ச. இளங்கோ, சாத்தனூர்.

தமிழ்ச்சிட்டே! நீ மாணவ மணிகளுக்குத் தேன் ஊட்டும் சிட்டு. தென்மொழியின் இனிக்கும் செய்தியை எல்லாருக்கும் எடுத்து ஊட்டு கின்றாய். உனக்கு எப்படி நன்றிசொல்வது என்று தெரியாது விழிக் கின்றேன். உன்னைத் தேன்சிட்டு என்றால் மிகப் பொருந்தும்.

— சீனி. பொன்னரங்கம், கடலூர்-1.

தமிழ்ச்சிட்டு எங்களுக்குத் தமிழ்த்தேனைக் கொடுத்து உதவுகிறது. அவ் வணி மலரைப் படிப்பதால் அழுக்காய் இருந்த எங்கள் சிறுவர் உள்ளம் புகழ்மணம் வீசி இன்பம் காணுகின்றது. அதன் ஒவ்வோர் எழுத்தும் ஒருபொன் போல் இருக்கிறது. எங்களை ஆளாக்கும்பெருமை தமிழ்ச்சிட்டுக்கே.

—க. சிதம்பரம், பேராவூருணி.

நான் இதுகாறும் எத்தனையோ தமிழ்நூல்களைப் படித்துள்ளேன். என் பருவத்துக்குத் தமிழின் இனிமையைத்தான் நுகரமுடிந்தது. ஆனால் தனித்தமிழின் தனிச்சிறப்பைத் தங்கள் தமிழ்ச்சிட்டு தாளிகை யின் வழியாகத்தான் நுகரமுடிந்தது. பள்ளி இறுதிவகுப்பு படித்த எனக்கும் எவ்வளவோ பயன்படுகிறது.


—ஏ. தண்டபாணி, பிரும்மகுண்டம்(தெ.ஆ)

கொல்லும் பகை நீக்கிக் கூவும் தமிழ்ச்சிட்டே
வெல்லுக என்றும் சிறந்து.
சிறுவர்க் (கு) உதவுகிற செந்தமிழ்ச் சிட்டேநீ
பெருகுக பேறுபல பெற்று.

—ந.ச.ஞானையா, சேரன்சுபுரம், பசுமலை.

சிறுவர் தமிழென்னும் சீர்சால் பெயரில்
மறுகுவாழ் மக்கள் மொழியும்—உறுபயன்
எய்தற்(கு) இயலார் இயற்றிட்ட பன்மொழிச்சொல்
பெய்யும் கலப்புத் திருமொழியும்— ஐயகோ;
இன்பத் தமிழ்ச்சிட்டின் ஏற்றப் பொலிவுகண்(டு)
என்புருக்கி எய்தும் இனி

தரங்கை. ச. பன்னீர்ச்செல்வன், தரங்கம்பாடி.



# தமிழ்ச்சிட்டு

**தனித்தமிழ்**
**சிறுவர் கலைஇதழ்**

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு !
இன்றைய சிறுவர் நாளைய உலகம் !
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை !
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்-1 | தி. பி. ௧௯௯௮ இரட்டை (ஆனி) சூன் | இசை-11

### திருவாட்டிகள்

## ‘மினுக்கி’யும், ‘அரட்டை’யும்.

சிறுவர் சிறுமியர்களே! முன்பொரு தமிழ்ச்சிட்டில் திருவாளர்கள் ‘ஏதோ’வைப் பற்றியும் ‘சும்மா’வைப் பற்றியும் தெரிந்து கொண்டீர் கள். அதைப்படித்த தம்பிகளில் சிலர் மாணவர்களை மட்டும் அப்படிப் பகடி(கேலி)செய்து விட்டீர்களே, மாணவிகள் மட்டும் உயர்த்தியா? என்று கேட்டிருந்தனர். நாம் சொல்லுபவை எல்லாமும் எல்லாருக்குந் தாம். சில செய்திகள் பெரியவர்களுக்குக்கூட மிகத் தேவையானவை யாக இருக்கும். ஆகவே ‘இச்செய்தி இவர்களுக்காகத்தான்’ என்று விட்டுவிடாமல், எல்லாரும் எல்லாவற்றையும் படித்து ‘‘அவை

பொறுப்பாசிரியர்:- பெருஞ்சித்திரன்
உறுப்பாசிரியர்:- இறைக்குருவன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1


நமக்காகவுந்தான்'' என்று கருதிக் கொள்ளுங்கள். இருந்தாலும் மாணவிகளில், இரண்டு பெண்களை உங்களுக்கு அறிமுகப் படுத்தி வைக்கின்றோம். அவர்களே திருவாட்டிகள் 'மினுக்கி'யும் 'அரட்டை'யும்.

முதலில் திருவாட்டி 'மினுக்கி'யைப் பற்றி அறிந்து கொள்வோம். இந்த அம்மை(!)யாரின் வாய் எப்பொழுதும் திரைப்படப் பாட்டையே முனுமுனுத்துக் கொண்டு இருக்கும். இவருக்குத் திரைப்படம் என்றால் கொள்ளை ஆவல். அதுவும் அதில் வரும் ஒரு குறிப்பிட்ட நடிகை யாகவே தன்னைக் கருதிக் கொள்வார். அவர்போலவே உடை உடுப் பார்; உதட்டுச்சாயம் பூசிக்கொள்வார்; முகமா (POWDER) அப்பிக் கொள்வார்; மை தீட்டிக்கொள்வார்; தலைமுடியை ஒவ்வொரு நாளுக்கு ஒவ்வொரு வகையாகப் புனைவு செய்து கொள்வார். எதையும்—எவரை யும் நேராகப் பார்க்கமாட்டார்; கண்களைச் சிறிது சாய்த்தபடியேதான் பார்ப்பார். தன் தோழிகளுடன் எப்பொழுதும் துணிமணிகளைப் பற்றி யும், தாம் அன்றாடம் வாங்கும் புனைவு(அலங்கார)ப் பொருள்கள் பற்றி யுமே பேசிக் கொண்டிருப்பார். பள்ளிப் பாடங்களைச் சரிவரப் படிக்க மாட்டார். பள்ளிக்கூடப் பொத்தகங்களின் இடையில் திரைப்பட நடிக நடிகையர்களின் படங்களை வைத்துக்கொண்டு அடிக்கடி பார்த்து மகிழ்வார். காலை, மாலை இருவேளைகளிலும் தன்னை வகை வகையாக அழகு செய்து கொள்வார். துணிகளை இறுக்கமாக அணிவ திலேயே இவருக்கு விருப்பம். மெல்லிய துணிகளே இவருக்கு மிகவும் பிடிக்கும். இவருக்கு வெளியே போவதென்றால் மிக மகிழ்ச்சி. இவர் கலை விருப்பம் கொண்டவர். இருப்பினும் தன்னை அழகுபடுத்திக் கொள்வதிலேயே பெரும்பொழுதைக் கழித்து விடுவார். ஆனால் தன்னைப்போல் அழகு செய்து கொண்ட பெண்களைச் சிறிது பொறு மைக் கண்களோடேயே பார்ப்பார். இவர் வாழ்க்கையில் ஓர் ஏமாளி!

இன்னொரு பெண் திருவாட்டி 'அரட்டை'. இந்த அம்மையாரின் வாய் எப்பொழுதும் 'படபட'வென்று அடித்துக்கொண்டே இருக்கும். ஓய்வு ஒழிச்சல் இன்றி இவர் எப்பொழுதும் பேசிக்கொண்டே இருப்

பார். அரட்டைக்கென்று எவராகிலும் புதிய பெண்கள் கிடைத்து விட்டால் போதும். இவர்களின் 'தொண தொணப்பு' அடங்கவே அடங்காது. தனக்குத் தெரியாத செய்தியை எல்லாம் தெரிந்தது போல் பேசித் தீர்ப்பார். பெரியவர்கள் பேசிக்கொண்டிருக்கும் பொழுதும் அடிக்கடி குறுக்கிட்டு, அவர்களுக்குத் தொடர்பு அற்ற பேச்சுகளைப் பேசித் தொல்லை கொடுப்பார். இவருக்கும் திரைப் படங்களிலும் கதைப் பொத்தகங்களிலும் பற்று மிகுதியாக இருக்கும். ஓரளவு தனக்குள்ள அரைகுறை அறிவோடு இவர் பேசும் பேச்சுகளில் அறியாமையே மிகுந்து இருக்கும். இந்த அம்மையாருக்குத் தன்னைப் பற்றிப் பெருமையாகப் பேசுவது நிரம்பப் பிடிக்கும். தன்னொத்த தோழிகளிடம் தானே தலைமையாக இருக்க விரும்புவார்; அவர்களுக்குத் தானே வழிகாட்டி என்று கூறிக் கொள்வார். மாணவர்களை வெளிப்படையாக இவருக்குப் பிடிக்காது. இவர்களிடம் மாணவர்கள் தப்பித் தவறி வாய் கொடுத்தால் வந்தது 'வம்பு'. இவர்களை ஓய வைக்க எவர் வந்தாலும் முடியாது. மொத்தத்தில் இப்படிப் பட்டவர்கள் எவரையும் எளிதில் நம்பி விடுவார்கள்.

சிறுமியர்களே! உங்களில் இத்தகைய பெண்களை நீங்கள் அடிக்கடி பார்க்கலாம். அவர்கள் உங்கள் தோழியர்களாகவும் இருக்கலாம். இருப்பினும் அவர்களை நீங்கள் வெறுத்தல் வேண்டா. அவர்களை அன்புடன் அணுகி, அவர்களிடம் உள்ள அறியாமையை எடுத்துக்கூறி அவர்களைத் திருத்த முற்படுங்கள். ''புற அழகை விட அக அழகே உயர்ந்தது; பிறர் மதிக்கத்தகுந்தது'' என்பதைத் திருவாட்டி 'மினுக்கி'க்கு எடுத்துக் கூறுங்கள். அதேபோல் ''அடக்கமே உயர்ந்த பண்பு'' என்பதையும் ''நாவடக்கமே சிறந்தது; நம்மை உயர்த்த வல்லது; நாவைக் காக்காமல் போனுல், நமக்கு வரும் இகழ்ச்சிகளால் வருந்தவேண்டி இருக்கும்'' என்பதையும் எடுத்துக் கூறி 'அரட்டை'யைத் திருத்துங்கள். அறியாமையால் தவறு செய்பவர்கள் நோயாளிகளைப் போன்றவர்கள். அவர்கள் மேல் இரக்கப்பட்டு அவர்களுக்குத் துணையாக இருங்கள். O



# உலகம் சுற்றுவோம்

## புரட்சி வாழ்க்கை !

ஆப்பிரிக்காவில் 'கினியா' என்றொரு நாடு இருக்கிறது. இந்த நாடு 1963-ஆம் ஆண்டு திசம்பர் மாதம்வரை வெள்ளையருக்கு அடிமைப் பட்டிருந்தது. தங்களின் நாட்டை விடுவிக்க 'மாவ்மாவ்' என்ற புரட்சி இயக்கத்தை அந்நாட்டவர் தோற்றுவித்தனர். அந்த இயக்கம் வெள்ளைக்காரர்களால் தடைசெய்யப்பட்டதால் புரட்சிக்காரரான 'கௌரினா கத்தித்தாவா' என்பவர் கடந்த 14 ஆண்டுகளாகக் காடுகளில் ஒளிந்து வாழ்ந்துவிட்டு அண்மையில் 'கினியா' நாட்டுக்காவலரிடம் அடைக்கலமுற்றார். இடைக்காலத்தில் தம் தாய்நாடு விடுதலை அடைந்த செய்தியே அவருக்கு இப்பொழுதுதான் தெரியுமாம்.

## மொழித் தூய்மை !

பிரெஞ்சு மொழியின் தூய்மையைக் காக்கும் பொருட்டு ஒருபுதிய சொற்பொருள் களஞ்சியத்தைக் கடந்த 35 ஆண்டுகளாக உருவாக்கி வருகிறார்கள். இதுவரை A, B, C என்னும் மூன்று எழுத்துகளின் கீழ் உள்ள சொற்களைத்தாம் தொகுத்துள்ளார்கள். களஞ்சியம் முழுமை அடைய இன்னும் நூறு ஆண்டுகள் பிடிக்குமாம்.

## கற்கை நன்றே!

ஆப்பிரிக்காவில் நயாலாந்து என்று ஒரு நாடு. மூன்று கோடி மக்களைக் கொண்ட இந்த நாட்டில் 22 பெயர்கள்தாம் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்கள். அவ்வளவுக்குப் பின் தங்கிய நாட்டில் 'காயீரா' எனும் இளைஞருக்குக் கல்வி கற்பதில் அளவு கடந்த ஆர்வம் ஏற்பட்டது. அதன் விளைவாக 1958-இல் தம் நாட்டைவிட்டுக் காலில் செருப்புமின்றி நடையைத் தொடங்கினார். இரண்டு ஆண்டுகள் கால் நடையாகவே பயணம் செய்து 2500 கல் தொலைவைக் கடந்து அமெரிக்காவில் கல்லூரியில் சேர்ந்து படித்தார். இப்பொழுது இங்கிலாந்தில் படித்துக் கொண்டிருக்கிறார். தம் வாழ்க்கையை "நான் முயன்றே தீருவேன்" என்னும் நூலாக எழுதியுள்ளார்.




# புகை வண்டி.

இரும்பு வண்டி ஒன்று வந்தே
எட்டுப் பெட்டியை இழுக்குதாம் !
கறுப்புப் புகையைக் கக்கிக் கொண்டு
காடும் மலையும் தாண்டுதாம் !

பச்சைக் கொடியைக் காட்ட, வண்டி
பறந்து கொண்டு செல்லுதாம் !
உச்சி கிழியக் கூவிக் கூவி
ஊரை நோக்கி ஓடுதாம் !

கையில் உள்ள சிவப்புக் கொடியைக்
கண்டால் அஞ்சி நிற்குதாம் !
மெய் குலுங்கக் கோடிப் பேரை
மேற்கும் கிழக்கும் சேர்க்குதாம் !

குன்றின் மேலே, காட்டுக் குள்ளே
குரல் கொடுத்துப் போகுதாம் !
தண்ணீர் குடித்துக், கரியைத் தின்று
தாவிக் குதித்துப் போகுதாம் !

**துரை-மாணிக்கம்**

# நாய்க்குட்டி.

— அலே-கணக்காயன்.

தோத்தோ சின்ன நாய்க்குட்டி
துள்ளி வரும் நாய்க்குட்டி
தாத்தா தந்த நாய்க்குட்டி !
தாவி வரும் நாய்க்குட்டி !

வாயில் புறம் காத்திடும்;
வாலை ஆட்டிக் கூத்திடும்;
பாயில் லாமல் தூங்கிடும்;
படிப்பில் லாமல் ஏங்கிடும் !

கன்றுக் குட்டி நண்பனும்;
கருப்புப் பூனை அன்பனும்;
நன்றி மிக்க பண்பனும்;
நயந்தவர்க்கே அன்பனும் !

ஓடி ஆடித் திரியுமே !
உண்மைக் காவல் புரியுமே !
தேடி நட்பைப் பிடிக்குமே !
திருடன் காலைக் கடிக்குமே !

வாலை ஆட்டிக் குழையுமே !
வழியைக் காட்டி அழையுமே !
வேலை இதற்குக் காவலே !
வளர்க்கக் கொள்வோம் ஆவலே !


## உங்களுக்கொரு பரிசு !

தம்பி தங்கைகளே! நீங்கள் ஒவ்வொருவரும் தமிழ்ச்சிட்டுக்கு ஐந்து மாணவர்களை உறுப்பினராக்கினுல் உங்கள் பெயருக்கு ஓராண்டிற்குத் 'தமிழ்ச்சிட்டு' இலவசமாக அனுப்பப்படும். எங்கே! இன்றே ஐந்து உறுப்பினர் தொகை உருபா பத்தையும் ஆறு முகவரிகளையும் அனுப்பி வைத்து இலவசமாகத் தமிழ்ச்சிட்டைப் படியுங்கள்.

—அமைச்சர், தமிழ்ச்சிட்டு, கடலூர்-1.

# வியப்படைய வேண்டா !

தொகுப்பு: வ.சஞர்த்தனன், வ. சரளாதயாநந்தன், பள்ளிநேலியனூர்.

- இரண்டே நாட்களில் 24,000,000 000,000,000,000,000,000 நுண்ணுயிரிகள் (பாக்டீரியாக்கள்) பிரிதல் மூலம் உண்டாகின்றன.
- உலகில் ஏறத்தாழ 1800 வகை நாங்கூழ்ப் புழுக்கள் உளவாக அறிஞர்கள் கணக்கிட்டுள்ளனர்.
- இந்தியாவின் அரசியல் அமைப்பை உருவாக்கச் செலவான உருபா 63,96,729. செலவான நேரம் 2 ஆண்டு 11 திங்கள் 18 நாள். உறுப்பினர் 308 பேர்.
- பனித் தீவுக்கும் (ஐசுலாந்து) அண்டார்டிகாவுக்கும் இடையில் உள்ள கடற்பரப்பின் அடியில் 10,000 கல் நீளமும், 600கல் அகலமும் உள்ள ஒரு பெரிய மலைத்தொடர் உள்ளது.
- அசந்தாவில் உள்ள 27 முழை(குகை)களையும் வெட்டிச் செதுக்கி முடிக்க 700 ஆண்டுகள் ஆயினவாம்.
- ஒருவர் மற்றவருக்குத் தரும் முத்தம் 55 'வாட்சு' மின்சாரம் தரக்கூடியதாம்.
- 4 திங்களே வளர்ச்சி பெற்ற 'ரை'செடி ஒன்று ஏறத்தாழ 7000 கல் நீளமுள்ள வேர்களையும், கிளை வேர்களையும், வேரிழைகளையும் பெற்றிருந்ததாம்.
- நிலைத்திணைகளின் வேர்களால் உறிஞ்சப்படும் நீர் சில நேரங்களில் ஏறத்தாழ 250 அடி உயரம் கொண்டு செல்லப்படுகிறது.
- 'ஆர்க்கிட்' என்ற செடியின் ஒரே ஒரு விதையுறையில் மட்டும் 3,750,000 விதைகள் இருந்தவாகக் கணக்கிடப்பட்டது.
- காளான்கள் விதைகளைக் கொட்டும். சிலவகைக் காளான்கள் மணிக்கு 500 கோடி விதைகள் வீதம் பல நாட்கள் இடைவிடாமல் கொட்டுமாம்.
- நாங்கூழ்ப் புழு உட்கொள்ளும் உணவு ஏறத்தாழ 100 பகுதிகளின் வழியாய்ச் செல்கிறது.
- நத்தையின் வாயில் ஏறத்தாழ 15,000 பற்கள் (இராடுலா) உள்ளன.
- ஒரு முறை அட்டை உணவு உண்டால் 6 அல்லது 7 திங்கட்கு அதற்கு வேறு உணவே தேவைப் படாது.
- மண்ணின் வரலாற்றில் 30 கோடி ஆண்டுகட்கு முன்பே வேர்கள் இடம் பெற்றுள்ளன.

# தமிழ்ச்சிட்டு ஆண்டுமலர்.

மாணவச் செல்வங்களே !

o அடுத்த தமிழ்ச்சிட்டு ஆண்டு மலராக 36 பக்கங்களுடன் வெளி வருகின்றது.

o சிறு கதைகள், இனிய பாடல்கள், நல்ல கட்டுரைகள், அறிவு நிரம்பிய துணுக்குச்செய்திகள், நகைச்சுவைகள், பெரியோர் வரலாறுகள் முதலியவற்றோடு புதிய அட்டைப்படத்துடன் சிறப்பாக மலரும்.

o மலர் விலை 35 காசு.

o உறுப்பினர்கள் மலருக்குத் தனியே பணம் விடுக்க வேண்டியதில்லை.

o புதிதாக மலர்பெற விரும்புவோர் 40 காசுகள் அஞ்சல்தலை விடுக்க வேண்டும்.

o விற்பனையாளர்கள் தங்களுக்குத் தேவையான மலர்களை முன்கூட்டியே தெரிவித்தல் வேண்டும்.

o மலர்கள் குறிப்பிட்ட அளவே அச்சிடப்பெறுவதால், முன்பணமில்லாத விற்பனையாளர்கள் தேவையான மலர்களுக்கான விற்பனைப் பணத்தில் 25% கழிவு நீக்கி மிகுதியை முன்பணமாக அனுப்ப வேண்டும்.

o பள்ளிக்கூட ஆசிரியர்கள் ஒரே மொத்தமாக 20 மலர்களைப் பெற 6 உருபா விடுத்தால் போதும். அதற்குக் குறைத்து விடுத்தல் இயலாது.

o ஆசிரியர்கள் தங்கள் தங்கள் மாணவர்களிடம் காணும் அறிவுத் திறங்களைப் பற்றியும், மாணவர்கள் தங்கள் தங்கள் ஆசிரியர்களிடம் காணும் உயர்ந்த பண்பாடுகளைப்பற்றியும் எழுதியனுப்பலாம்.

o சிறுவர்கள் முன்னேற்றங் கருதி எழுதி விடுக்கப்பெறும் எல்லாச் செய்திகளும் வரவேற்கப்படும்.

அமைச்சர்
தமிழ்ச்சிட்டு.
கடலூர்–1.



# குட்டிக்கதை

## உடையும் உண்ணுமா?

[மணியம்]

நிலவனார் நன்கு கற்றவர். சிறந்த அறிவாளி; பரந்த நோக்கு உடையவர்; எளிய தோற்றம் கொண்டவர். இனிய சொற்களைச் சிந்துபவர்; புறத்தோற்றத்தைக்கொண்டு அளப்பதைவிட அகத்தோற்றத்தையே அளவுக் கருவியாகக் கொண்டவர். ஒரு நாள் அவர் வாழ்ந்த வீதியில் செல்வர் ஒருவர் வீட்டில் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு அவரை அழைத்திருந்தார்கள். நிலவனார் சிறிய துண்டு ஒன்றை உடுத்தியிருந்தார். மணவிழாப் பந்தலை வந்தடைந்தார் விழா இனிது நடந்தேறியது. எல்லாரும் உண்டி அருந்தச் சென்றார்கள். நிலவனாரும் சென்றார். பலர் இலைமுன் உட்கார்ந்தனர். அவருடைய தோற்றத்தைப் பார்த்தனர். முட்டளவு துண்டு ஒன்றை உடுத்தியிருக்கின்றார். ஏதோ இரங்கத்தக்க பேர்வழி என்று நினைத்தனர், அவர் அங்கு உண்பது தங்களுக்குப் பெருமைதருவதாகாது என்று எண்ணினர். உடனே நிலவனாரைக் கையைப் பிடித்துத் தூக்கி வழியனுப்பி விட்டனர். நிலவனார் வருந்தவில்லை; சினப்படவில்லை. அவர்களின் அறியாமையை எண்ணினார். உடனே வீட்டிற்கு விரைந்தார். புதிய வேட்டி, சட்டை, குப்பாயம்(COAT) அணிந்து கொண்டு திரும்பி வந்தார். விருந்தில் அவரை மன்னரை வரவேற்பது போல் வரவேற்றனர். இலை முன் அமர்ந்தார். அறுசுவை உண்டி வழங்கப்பட்டது. பழத்தை எடுத்தார். நீண்ட சட்டைப் பையில் திணித்தார். சோற்றை எடுத்தார் இன்னொரு சட்டைப் பையில் இட்டார். மேல் துண்டை எடுத்து மிளகுச் சாற்றில் நனைத்தார். விருந்தினர் இவர் செய்கையைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தனர். ஏனய்யா இப்படிச் செய்கின்றீர்? என்று வினவினர். "சரியாகத்தான் செய்கின்றேன். சற்றுமுன் எளிய உடையில் வந்தேன். என்னை இழுத்து வெளியில் தள்ளினீர்கள். இந்த உடையில் வந்ததும் மிகவும் பெரியவனாக எண்ணி என்னை மதித்தீர்கள். உடைக்குத்தானே நீங்கள் வரவேற்பு கொடுத்தீர்கள். எனவே உடை உண்ணுமா என்று பார்க்கின்றேன். அதற்கு ஊட்டுகின்றேன் என்று நிலவனார் பதிலிறுத்தார். அனைவரும் நாணினர். தங்கள் தவற்றை உணர்ந்து மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டனர்.




# 8. பதிற்றுப்பத்து.

பதிற்றுப்பத்து என்னும் இந்த இலக்கியமும் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றேயாகும். இந்நூலில் சேரமன்னர் பதின்மரைப்பற்றித் தனித்தனியே பத்து பத்துப் பாடல்களாகப் பத்துப் புலவர்கள் பாடியுள்ளனர்.

பத்து பத்துப் பாடல்களைக் கொண்ட பத்துப் பகுதிகளால் அமைந்த நூல் ஆதலால் இந் நூல் பதிற்றுப்பத்து எனப் பெயர் பெற்றது. இதன்கண் அரசர்களின் பெருமிதம் எனப்படும் மறம், புகழ், வள்ளல் தன்மை முதலியவற்றைப் பற்றிக் கூறப்படுவதால் இந் நூல் புறத்துறையைச் சேர்ந்ததாகும்.

இந் நூலில் இப்பொழுது நம் கைக்குக் கிடைத்திருப்பன இடையில் உள்ள எட்டுப் பத்துகளேயாகும். முதற்பத்து இறுதிப்பத்து ஆகிய இரண்டும் இதுவரையில் கிடைக்கவில்லை. ஆயினும் தொல்காப்பியவுரை, புறத்திரட்டு முதலியவற்றில் பதிற்றுப்பத்தைச்சேர்ந்தனவாக ஆறுபாட்டுகள் உள்ளனவென்று அறிஞர் முடிவு கட்டியுள்ளனர். சில பாட்டுகளில் சில சீர்களும் அடிகளும் சிதைந்துள்ளன.

ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் துறை, வண்ணம், தூக்கு, பெயர் ஆகியவற்றைப் புலப்படுத்தும் பழங்குறிப்புகள் அமைந்துள்ளன. மேலும் ஒவ்வொரு பத்தின் முடிவிலும் பாடப்பட்ட அரசரைப்பற்றியும் பாடிய புலவரைப் பற்றியும் கூறும் பதிகம் என்னும் பகுதியும் அமைந்துள்ளன.

இந் நூலைத் தொகுத்தவரும் தொகுக்கச் செய்தவரும் யாவர் என்று தெரியக்கூடவில்லை. இதன்கண் முறையே இரண்டாம் பத்து முதல் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனாரும்

பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாலைக் கௌதமனாரும், களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனாரும், கடல் பிறக் கோட்டிய செங்குட்டுவனைப் பரணரும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை காக்கை பாடினியார் நச்செள்ளையாரும், செல்வக் கடுங்கோ வாழியாத னைக் கபிலரும், பெருஞ்சேரல் இரும்பொறையை அரிசில் கிழாரும், இளஞ்சேரல் இரும்பொறையைப் பெருங் குன்றூர்க் கிழாரும் பாடி யுள்ளனர்.

இறைச்சி விற்பார் ஊனைக் கொத்துதல், ஊன்கலந்து சோருக்கு தல், கடைத்தெருவில் பொருள்களைக் குறிக்கக் கொடி கட்டுதல், குன் றேறி நின்று கண்ணிற்கண்ட நாட்டைப் புலவர்க்குக் கொடுத்தல், தோற்ற மன்னனின் காவல் மரத்தால் முரசு செய்தல், தோற்ற வேந்த ரின் கையைப் பின் கட்டாகக் கட்டித் தலையில் நெய் பெய்தல், நெல் அளவைக்கு உறைவைத்தல் முதலியன இந்நூலில் காணப்படும் குறிப் பிடத்தக்க செய்திகளாகும்.

இந் நூல் ஏனைய கழக நூல்களைவிடச் சொல் நுட்பமும் பொருள் திட்பமும் நடைச் செப்பமும் வாய்ந்ததாகும். இதனைப் பயின்றவர் ஏனைய நூல்களைப் பயிலுதல் எளிது என்பர்.

## ஆறுநாள் போரின் விளைவு!

அண்மையில் 'இசுரேல்' என்னும் நாட்டுக்கும் எகிப்து முதலிய அரபு நாடுகளுக்குமிடையில் நடந்த சண்டையின் விளைவாக இரு தரப்பிலும் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். 15,000 மறவர் களுக்கு மேல் சிறைப்பிடிக்கப்பட்டனர். 80,000-க்கு மேற்பட்டோர் ஏதிலிக(அகதிக)ளாக்கப்பட்டனர். 400-க்கு மேற்பட்ட வானூர்திகளும் 700-க்கு மேற்பட்ட தகரிகளும் (டாங்கிகள்) நொறுக்கப்பட்டன. சூயசு கால்வாய் என்னும் கப்பல் பாதையில் கப்பல்கள் மூழ்கடிக்கப் பட்டதால் கப்பல் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. இசுரேல் நாடு குண்டு வீசியதில் இந்தியாவைச் சேர்ந்த 'அமைதிகாக்கும் படை யினர்' 17 பேர் கொல்லப்பட்டனர். 23 பேர் காயமடைந்தனர்.

# எங்கள் பெயர்களைத் தூய தமிழ்ப் பெயர்களாக மாற்றிக் கொண்டோம்.

('தமிழ்ச்சிட்டு' கேட்டுக்கொண்டபடி தமிழ்த்தம்பி தங்கைகள் பலரும் தங்கள் தங்கள் பிறமொழிப் பெயர்களைத் தூய தமிழ்ப் பெயர்களாக மாற்றிக்கொண்டதாக, அறிவித்திருக்கின்றார்கள். அவர்களின் பெயர்களைத் 'தமிழ்ச்சிட்டு' தொடர்ந்து இப்பக்கத்தில் பாடிக்காட்டும். அன்பும், அறமும், கல்வியும், வளமும் நிரம்பிய நல்ல குடிமக்களாகவும் தொண்டர்களாகவும் இனி வருங்காலத்தில் வளர்ந்து சிறக்கும்படி 'தமிழ்ச்சிட்டு' அவர்களை வாழ்த்துகின்றது. இடமின்மையால் அவர்களின் முழு முகவரிகளையும் தரமுடியாமைக்கு வருந்துகின்றோம்.

—ஆசிரியர்.

| எண். | முன்னையபெயர். | மாற்றியபெயர். | ஊர். | பெயர் மாற்றத்திற்கு உதவியவர்கள். |
|---|---|---|---|---|
| 73 | வேணுகோபால் | குழற்கோமான் | போடிநாயக்கன்பட்டி | 'தமிழ்ச்சிட்டு |
| 74 | அரங்கநாதன் | வில்லவன்கோதை | கொல்லப்பட்டி | ,, |
| 75 | ஐயந்துரை | பெருவழுதி | வெள்ளையக்கவுண்டந்தெரு | ,, |
| 76 | கண்ணம்பாள் | கயற்கண்ணி | ,, | ,, |
| 77 | சாரதா | கோப்பெருந்தேவி | ,, | ,, |
| 78 | வை. கிருட்டிணமூர்த்தி | எழில்ஓவியன் | குறிஞ்சிப்பாடி | ,, |
| 79 | செயராமன் | இளமாறன் | உடவயல் | தந்தை |
| 80 | கணேசமூர்த்தி | மணிமார்பன் | நம்பியூர் | வில்லவன்கோதை |
| 81 | சண்முகம் | செழியன் | ,, | ,, |
| 82 | கோபாலன் | இளங்கோ | ,, | ,, |
| 83 | கோவிந்தசாமி | அருள்மொழி | ,, | ,, |
| 84 | செயப்பிரகாசம் | வெற்றியொளி | ,, | ,, |
| 85 | கறுப்புசாமி | அறிவுஒளி | ,, | ,, |

| | | | | |
|---|---|---|---|---|
| 86 | பழனிச்சாமி | எழிலன் | ,, | ,, |
| 87 | பொன்னுசாமி | மதியொளி | ,, | ,, |
| 88 | ஆமோசு | ஆண்டகை | ,, | ,, |
| 89 | தனபால் | இனியவன் | ,, | ,, |
| 90 | காந்திபன் | தமிழ்வென்றி | ,, | ,, |
| 91 | சான்வில்லியம் | அருட்கோ | ,, | ,, |
| 92 | குமரேசன் | இளம்பரிதி | ,, | ,, |
| 93 | கண்ணன் | இளஞ்செழியன் | ,, | ,, |
| 94 | இராசாமணி | இளங்குட்டுவன் | ,, | ,, |
| 95 | விசயகுமார் | இளந்தென்றல் | ,, | ,, |
| 96 | பத்மநாபன் | இளமாறன் | உரத்தநாடு | தொல்காப்பியர்மன்றம் |
| 97 | பாலசுப்பிரமணியன் | இளம்பரிதி | ,, | ,, |
| 98 | சுப்பிரமணியன் | இளம்பரிதி | ,, | ,, |
| 99 | சண்முகம் | மணிவண்ணன் | ,, | ,, |
| 100 | சம்பந்தம் | இளஞ்செழியன் | ,, | ,, |
| 101 | பொ. மண்ணுங்கட்டி | மணிவண்ணன் | சாத்தனூர் | தானே! |
| 102 | இரா. முரளீதரன் | இளம்வழுதி | அழகாபுரம் | ,, |
| 103 | ச. சம்சுதீன் | அறிவழகன் | ,, | ,, |
| 104 | இரா. சுந்தர் | மணிமொழி | ,, | ,, |
| 105 | த. தனராசு | நற்பொலிவன் | சூரப்பள்ளம் | ,, |
| 106 | குப்பழகன் | இமயவரம்பன் | முதலைப்பட்டி | ,, |
| 107 | தொ. இல. சீனிவாசன் | திருவுடைமார்பன் | கிருட்டிணகிரி | ,, |
| 108 | அ. கிருட்டிணன் | மெய்ம்மொழி | மதுரை-கக | ,, |
| 109 | வ. ஞானப்பிரகாசம் | அறிவுஒளி | வண்டிப்பாளையம் | ,, |
| 110 | சை. அசுமல்லா | கதிரொளி | பரிவில்லிக்கோட்டை | ,, |
| 111 | க. காந்தி | க. இளவன் | பஞ்சலிங்கம்பாளையம் | ,, |
| 112 | வேலுச்சாமி | செம்பியன் | நம்பியூர் | ,, |
| 113 | கு. சுவாமிநாதன் | இறைக்குரு | பெங்களூர்-உ | ,, |

(வளரும்)



# பிழையில்லாமல் எழுதுங்கள் பேசுங்கள்

## 8. அவை. அவற்றை.

இது, அது என்ற சொற்களை நீங்கள் அறிவீர்கள். இவையிரண்டும் சுட்டுச் சொற்கள். ஒருமைச் சொற்கள். இவற்றிற்குப் பன்மைச் சொற்கள் இவை, அவை என்பவாகும்.

ஒருமைச் சொல்லைப் பன்மைச் சொல்லாக்க நாம் அச்சொல்லோடு 'கள்' என்ற பன்மை விகுதியைச் சேர்க்கின்றோம்.

மாடு – ஒருமை. மாடுகள் பன்மை.
மரம் – ஒருமை. மரங்கள் பன்மை.

'கள்' என்ற பன்மை விகுதிச் சொல்லை எப்பொழுதும் பெயர்ச்சொற்களோடுதான் சேர்க்க வேண்டும். ஆனால் சிலர் இதைச் சுட்டுச் சொற்களோடே சேர்த்து எழுதுகின்றனர். அது பிழையாகும்.

இதுகள் அதுகள் என்றும்
இவைகள் அவைகள் என்றும் எழுதுதல் கூடாது.


மாடு புல்லை மேய்ந்தது; அது மாலையில் வீடு திரும்பியது. இச் சொல் தொடர்களைப் பன்மைத் தொடர்களாக மாற்றினால் மாடுகள் புல்லை மேய்ந்தன; அவை மாலையில் வீடு திரும்பின. என்று இருக்க வேண்டும். ஆனால் சிலர் மாடுகள் புல்லை மேய்ந்ததுகள்; அதுகள், மாலையில் வீடு திரும்பியதுகள். என்றும்,
''மாடுகள் புல்லை மேய்ந்தன; அவைகள் மாலையில் வீடு திரும்பின' என்றும் எழுதுகின்றனர். இவை பிழையான தொடர்களாகும்.
அதுகள் என்பதும் அவைகள் என்பதும் பிழை.

அது போலவே,

''அதுகளைக் கட்டிப் போட்டனர்'' என்றோ ''அவைகளைக் கட்டிப் போட்டனர்'' என்றோ எழுதுவதும் பிழையே.
''அவற்றைக் கட்டிப் போட்டனர்' என்று எழுதுவதே சரியாகும்.

# தெரிந்து கொள்ளுங்கள்

- மிகவும் நுண்ணுயிரிகளான பாக்ட்டீரியாக்கள் ஒரு நாள் முழுவதும் நகர்ந்தால் ஒரு விரற்கடை(ஓர் அங்குலம்)தொலைவுதான் நகருமாம்.
- ஓர் எறும்புக் கூட்டத்தில் குறைந்தது 50,000 எறும்புகள் இருப்பதாகக் கணக்கிட்டுள்ளனர்.
- ஒரு மரம் தன்னைச்சுற்றி 20 குறுக்கம் (ஏன்) நிலப்பரப்பின் மேல் உள்ள கரிவளியைச் சேர்த்து வைக்கின்றது.
- ஒரு குறுக்கம் (ஏகர்) பரப்பளவுள்ள நிலத்தில் ஏறத்தாழ 50 கோடி எண்ணிக்கையுள்ள முட்டை, புழு, பூச்சிகளும், 100கோடி உண்ணிகளும் எண்ணற்ற நுண்ணுயிரிகளும் வாழ்வதாகக் கணக்கிட்டுள்ளனர்.
- ஒரு சிறு தேக்கரண்டியளவுள்ள மண்ணில் ஏறத்தாழ 240 கோடி நுண்ணுயிரிகள் உள்ளனவாம். வறண்ட பாலைநிலத்திலிருந்து எடுக்கப் பெறும் தேக்கரண்டியளவுள்ள மண்ணிலும் ஏறத்தாழ 90,000 நுண்ணியிரிகள் இருக்குமாம்.
- ஓர் 'அவுன்சு'அளவுள்ள மண்ணை எடுத்து ஒவ்வொன்ருக நெருக்கமாகப் பரப்பி வைத்தால் அம்மண் 250,000 சதுர அடி அஃதாவது 6 குறுக்கம்(ஏகர்)நிலத்தை அடைத்துக் கொள்ளுமாம்.
- ஒரு சிறிய மண் என்பது ஒரு விரற்கடையில் (ஓர் அங்குலத்தில்) இருநூற்றில் ஒரு பங்கே குறுக்களவுள்ளதாக இருக்கின்றது.
- பொதுவாக நாம் காணும் மண்ணில் ஒரு மண்ணுக்கும் இன்னொரு மண்ணுக்கும் இடையில்உள்ள வெற்றிடத்தில் பல்வேறு உயிரினங்கள் வாழ்ந்து கொண்டுள்ளனவாம். மேலும் அந்த இடைவெளிகளில் நீரும் காற்றும் வேறு நிறைந்துள்ளனவாம்.
- இவ்வுலகத்தின் முக்காற் பங்குக்குமேல் உள்ள பகுதி எப்படி நீரால் சூழப்பட்டுள்ளதோ, அப்படியே இந் நிலத்தில் உள்ள ஒவ்வொரு மண்மேலும் அந்த அளவு நீர் சூழ்ந்து கொண்டுள்ளது. வறுத்தெடுத்ததுபோல் வற்றக் காய்ந்துள்ள பாலைநிலத்தின் மண் துகளிலும் கூட அந்த மண் துகளில் வாழும் உயிர்களுக்குப் போதுமான அளவு நீர் உள்ளதென்று மண்ணியல் அறிஞர் கூறுகின்றனர். இந்த நீரை அந்த மண்ணில் உள்ள இழுப்பு ஆற்றலே அவ்வாறு சேர்த்து வைத்துள்ளதாகக் கூறுகின்றனர்.



# புதிர்....?

சென்ற மாதப் புதிரின் விடை:

புதிர் 1: 1, 2, 4, 8, 16 பொற்காசுகள்.

புதிர் 2: 25 மாங்காய்கள். கண்ணன் பங்கிற்கு: 11 காய்கள். வண்ணன் பங்கிற்கு: 8 காய்கள். திண்ணன் பங்கிற்கு: 6 காய்கள்.


இம்மாதப் புதிர்:

ஒரு வட்டரங்குக் (CIRCUS) காட்சியிலிருந்து ஒரு குதிரையும் கோவேறு கழுதையும் தப்பி ஓடின. குதிரையோ முதல் மணியில் ஒரு கல்லும் இரண்டாவது மணியில் இரண்டு கற்களும் மூன்றுவது மணியில் மூன்று கற்களுமாக ஒவ்வொரு மணிக்கும் ஒவ்வொரு கல் மிகுதியாக நடந்து போகின்றது. கோவேறு கழுதையோ முதல் மணியில் 10 கற்களும் 2-ஆவது மணியில் 9 கற்களும் 3-ஆவது மணியில் 8 கற்களுமாக ஒவ்வொரு மணிக்கும் ஒவ்வொரு கல் குறைவாக ஓடுகின்றது. இரண்டும் புறப்பட்டதிலிருந்து எத்தனையாவது மணியில் எத்தனையாவது கல்லில் ஒன்றையொன்று பிடிக்கும்.

இதற்கு விடை அடுத்த இதழில்.

புதிர் பற்றி நீங்கள் அறிய வேண்டுவன.

புதிர் உங்களுடைய அறிவு வளர்ச்சிக்கு ஒரு மருந்து; மூளைக்கு வேலை; நல்ல பொழுதுபோக்கு; மனமகிழ்ச்சி தரும் ஒரு விளையாட்டு. எனவே ஒவ்வொரு புதிருக்கும் நீங்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே விடை கண்டு பிடிக்காமல், மூன்று நான்கு பேர்களாகச் சேர்ந்து கொண்டு விடை கண்டு பிடிக்க முயற்சி செய்யுங்கள். உங்களில் யாரால் முதலில் விடை கண்டு பிடிக்க முடிகின்றதென்று பாருங்கள். அப்படி விடை கண்டு பிடித்த மாணவனை எல்லாரும் பாராட்டுங்கள். உங்கள் ஓய்வு நேரங்களை வீணடிக்காமல் இதுபோன்ற அறிவுக்கு வித்தான பல புதிர்களை நீங்களே கண்டு பிடியுங்கள். அவற்றைத் 'தமிழ்ச்சிட்டி'ற்கு அனுப்புங்கள். தேர்ந்ததெடுக்கப்படும் சிறந்த புதிருக்குப் பரிசாக ஓராண்டுக்குத் தமிழ்ச்சிட்டு அனுப்பி வைக்கப்படும்.



# எங்கள் விருப்பம் என்ன?

பெரியோர் கதைப் பகுதியில் மேல்நாட்டு அறிஞரைப்பற்றி மட்டுமே வெளியிடுகிறீர்கள். அருள் கூர்ந்து நம் நாட்டு அறிஞர், புலவர், வள்ளல்களின் வரலாறுகளையும் வெளியிடுங்கள்.

—க. கபிலன், சூரப்பள்ளம்.

தமிழ்ச்சிட்டு வெளிவரக்கண்டு மட்டிலா உவகை கொண்டேன். வெள்ளை உள்ளச் சிறுர் கொள்ளை இன்பம் கொள்வார். தமிழ்ச்சிட்டில் இளம் உள்ளங்களுக்கு ஆங்கில அறிவினையும் வளர்க்கும்படியான வழிவகை செய்ய வேண்டுகின்றேன்.

—மு. பெண்ணைநாடன், விளந்தை. (தெ.ஆ)

தமிழ்ச்சிட்டு மாணவர்களுக்கு ஏற்ற எளிய நடையில் கருத்து மிக்க ஆசிரியவுரைகளையும் அறிவு மொழிகளையும் தாங்கி வெளிவருவதைக் கண்டு மகிழ்வெய்துகின்றேன். மேலும் ஓரிரண்டு சிறுகதைகளையும், இன்னுஞ்சில பாடல்களையும், முடிந்தால் தலைவர்களின் படங்களை அட்டையில் வண்ணப் படங்களாகவும் வெளியிட்டால் மாணவர்களைக் கவர வாய்ப்பாகும் என்பது எனது எண்ணம்.

—செ. அத்தியப்பன், பொறியியல் ஆசிரியர், கோனேரிப்பட்டி.

மாணவ மணிகளே! இன்றைய தமிழ் இளைஞர்களாகிய நாம் நாளைய தமிழகத்தை ஆளப்போகும் தமிழ் மறவர்கள் என்பதைத் தெள்ளத் தெளிய உணருங்கள். தமிழ் நினைவூட்டும் தாளிகைகளையும் நூல்களையும விரும்பிப் பயிலுங்கள். இனிப் புதியதொரு தமிழகத்தை நம்மால்தான் உருவாக்க முடியும் என்பதை நாம் தமிழ் இளைஞர் என்ற நோக்குடன் நன்கு உணர வேண்டும். இத் தமிழகம் தன் அறிவைக் கெடுத்துக்கொண்டு பிற்போக்கு வழியில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. அப் பிற்போக்கு எண்ணத்தை மாற்றி இக்குமுகாயத்தை முற்போக்கு எண்ணத்துக்குத் திருப்ப வேண்டியது நம் கடமை.

—வீ. நாகராசன், அரியநகர், புதுவை-7.

தங்கள் தமிழ்ச்சிட்டை, தென்மொழியைப் பல நாளாய்ப் படித்து வருகிறேன். நானும் ஏறக்குறைய பத்துக்கு மேற்பட்ட இதழ்களைப் படித்து வருகின்றேன். நான் அவற்றில் கதை கட்டுரை பாடல்கள் எழுதி வருகின்றேன். இருப்பினும் தமிழ்ச்சிட்டு ஒரு தமிழ்க் களஞ்சியமாகவே இருந்து வருகின்றது. தமிழ்ப் பெயர்கள் தொகுப்பு பாராட்டுதற் குரியது. குட்டிக் கதை என் உள்ளத்தைக் கவர்ந்தது. அதோடு இல்லாமல் நல்ல தமிழ் அறிஞர்களின் வாழ்க்கை வரலாறுகளைச் சுருக்கமாக வெளியிடுங்கள். தமிழ்ச்சிட்டு என் உள்ளம் கவர்ந்த சிட்டு.

—தா. வளவன், வெட்டிவயல்.

## பயன் மொழிகள்!

- நாய் கடித்தது என்று நாயைக் கடிக்க மாட்டார்கள். அதுபோல அறிவில் சிறியவர் தம்மை இழிவாகப் பேசினுல், பெரியோர் அத் தகைய சொற்களைத் தாமும் திருப்பிக் கூற மாட்டார்.
- அறிய வேண்டியவற்றை அறிந்து, அஞ்சவேண்டிய தீயவற்றிற்கு அஞ்சி, இவ்வுலகோர் மகிழும்படி நன்மைசெய்து வாழும் தன்மை யுடையவர் எக்காலத்தும் துன்பம் என்பதையே அறியமாட்டார்.
- பாலில் கலந்த நீர் பால் போலவே காணப்படுதல் போல், பெரி யோரைச் சேர்ந்த சிறியோரும் பெரியோருக்குரிய பெருமை யையே அடைவர்.
- மிகுந்த சுவையுள்ள கரும்பில் மலர்ந்தாலும் அதன் மலருக்குச் சிறப்பில்லாமைபோல, உயர்ந்த செல்வக் குடியில் பிறந்தாலும் தன்முயற்சி இல்லாதவர்க்கு எவ்வகைத் தனிச் சிறப்பும் இல்லை.
- பெரியோர்கள் நட்பு, கரும்பை நுனியினின்று தின்பதைப் போல் சுவை பொருந்தியும், நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்ற பிறை போல் ஒளி மிகுந்தும், சாயுங்கால நிழல் போல் படிப்படியாய் வளர்ந்தும் விளங்கும். சிறியோர்கள் நட்போ, கரும்பை அடியி லிருந்து தின்பதைப் போலும், தேய்பிறை நிலவொளி போலும், முன்காலை நிழல் போலும் இருக்கும்.
- யானையைப் போன்றவர்கள்தம் நட்பை விட்டுவிட்டு, நாய் போன்றவர்களின் நட்பையே கொள்ளுதல் வேண்டும். யானை பலகாலம் பழகினும் தன் பாகனையே கொல்லும். நாயோ தன்னை அடித்தாலும் தான் பழகியவனிடம் வாலையாட்டி அன்பு காட்டும்.
- தெளிவான அறிவில்லாதவர் நட்பைவிட அவருடைய பகையே நல்லது; தீராத நோய்த்துன்பத்தைவிட இறந்து போதலே நல்லது; ஒருவனிடம் இல்லாத பண்புகளைச் சொல்லி அவனைப் புகழ்வதைவிட அவனைத் திட்டுதலே நல்லது.
- கற்ற அறிவாளர்கள் இடையில் கல்லாதவன் வந்து அமர்தல், நாய் ஒன்று அங்கு வந்து இருத்தல் போன்றதாகும். அவர் களிடத்து அவன் வாய்திறந்து ஏதாவது பேசுதலும் அந்நாய் வாய்மூடியிராமல் குரைத்தது போன்றதாகும்.
- கரித்துண்டை எத்தனை முறை பாலால் கழுவினுலும் அதன் கருமை மாருதது போல், அறிவிலா மூடர்க்கு எத்தனை முறை எடுத்துச் சொன்னுலும் அதனுல் பயன் விளையாது.

(நாலடியார் கருத்துகள்)

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.